# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வங்கித்தொழில் (திருத்தம்)

***1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, பெப்புருவரி மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***242 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *96.00***    **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் நோக்கங்களுக்காகக் ''கம்பெனி'' என்பதன் வரைவிலக்கணத்திலிருந்து கவச வங்கியொன்றைத் புறநீக்குவதற்கானதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு ஒரு கம்பெனியினால் வைத்திருக்கப்படவேண்டிய குறைந்தபட்ச உரிமமளித்தல் தேவைப்பாடுகளுக்காக ஏற்பாடுசெய்வதற் கானதுமாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் நோக்கத்துக்காக விண்ணப்பக் கட்டண மொன்றையும் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் சமர்ப்பிக்கும்படி கம்பெனியொன்றைத் தேவைப்படுத்துவதற்குமானதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கித்தொழிற் கம்பெனிகளும் கூட்டிணைக்கப்பட்ட குழுக்களும் இலங்கையினுள் வங்கித்தொழிலைத் தொடங்குதல் தொடர்பாகப் பணச்சபையினால் நிறைவேற்றப்பட்ட பணிகளை மத்திய வங்கிக்குக் குறித்தளிப்பதாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உள்நாட்டு வங்கித்தொழிலுக்கும் கரைகடந்த வங்கித்தொழில் கூறுக்கும் இடையேயான வரையீட்டை ஒழிப்பதனைக் கவனத்துட்கொண்டு உள்நாட்டு வங்கித்தொழிற் கூறு மற்றும் கரைகடந்த வங்கித்தொழிற் கூறு பற்றிய குறிப்பீட்டை அகற்றுவதாகும்.

***வாசகம் 7*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் செலுத்தப் படற்பாலதான வருடாந்த உரிமக் கட்டணத்தை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அறிவிப்பதனை ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறான பிரிவின் சட்டப்பயனானது ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று கடனிறுக்க வகையற்றதாக வந்தால் அல்லது அத்தகைய வங்கிக்கெதிராக ஒடுக்குதல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருந்தால், அதன் உரிமத்தை இல்லாதாக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

***வாசகம் 9*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கட்டாயமான ஒழித்துக்கட்டுகை தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளதனால் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற் புடைமைக்காக ஏற்பாடு செய்வதற்கானதாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(அ) அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சரின் ஒருப்பாட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவைப்பாட்டை அகற்றுவதாகும்;

(ஆ) இலங்கைக்கு வெளியேயான ஏதேனுமிடத்தில் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒரு கிளையை அல்லது பிரதிநிதித்துவ அலுவலகத்தைத் திறப்பதற்கு, மூடிவிடுவதற்கு அல்லது அதற்கு மீள்அமைவிடம் அளிப்பதற்கு அமைச்சருடன் கலந்தாலோசிப்பதனைத் தேவைப்படுத்து வதாகும்;

(இ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஓர் உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனியை அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனியொன்றினது தொழிலின் பாகத்தைக் கொள்ளுவதற்கான அல்லது வங்கியினது தொழில் எல்லாவற்றையும் அல்லது அதன் பாகத்தை விற்பனை செய்வதற்கான இயலுமாந்தன்மையை அறிமுகப்படுத்துவதாகும்;

(ஈ) இலங்கையில் பிரதிநிதித்துவ அலுவலகங்களைத் திறப்பதற்கு உட்கருதுகின்ற வெளிநாட்டு வங்கிகளினால் செலுத்தப்படவேண்டிய மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான விண்ணப்பக் கட்டணமொன்றுக்காக ஏற்பாடுசெய்வதாகும்;

(உ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை அல்லது அதன் கிளையொன்றை ஓர் உரிமமளிக் கப்பட்ட நிதிக்கம்பெனியுடன் ஒன்றிணைவதற்கு அல்லது ஒன்றுதிரள்வதற்கு அனுமதியளிப்ப தாகும்;

(ஊ) மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்துகைக்கு அல்லது மேற்பார்வைக்கு அமைந்ததாகவுள்ள வேறொரு நிதிநிறுவனத்தின் தொழிலை அல்லது தொழிலின் பாகத்தைக் கொள்ளுவதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றை அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றை இயலச்செய்து அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் புதிய பந்தி யொன்றை அறிமுகப்படுத்துவதாகும்;

(எ) அப்பிரிவின் (1இ) இன் ஏற்பாடுகளை மீறியுள்ள, விடயத்துக்கேற்ப, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை அல்லது தனியாளை, பங்காண்மையை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவை, முறையான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலான முக்கியமான அக்கறைக்கு விஞ்சுதலாகக் கொள்ளப்பட்ட அத்தகைய பங்குகளைக் கையுதிர்க்கும்படி அல்லது விற்பனைசெய்யும்படி பணிப்பதற்கு மத்திய வங்கியை இயலச்செய்வதாகும்; அத்துடன்

(ஏ) முக்கியமான அக்கறையின் கொள்ளுதல்களினது மீறுகைகளின் விடயங்களில், மத்திய வங்கியினால் எடுக்கப்படமுடியுமான நடவடிக்கைகளுக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரங்களை மீளப்பெறும் விடயங்களில் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டிய தேவைப்பாட்டை அகற்றுவதாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு, அல்லது அதன் வங்கித்தொழில் தொகுதிக்குச் சேவைகளை வழங்காத நிதிசாராத் துணைநிலைக் கம்பெனிகளிலான சொத்தாண்மையை உரிமைதுறப்பதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளைத் தேவைப்படுத்து வதாகுமென்பதுடன் அத்தகைய நிதிசாராத் துணைநிலைக் கம்பெனிகளில் வங்கியின் பங்குவைத் திருக்கையைக் கையுதிர்ப்பதற்காக ஐந்து ஆண்டுகளைக்கொண்ட நிலைபெயர்காலக் காலப்பகுதி யொன்றை அளிப்பதுமாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(அ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிப்பதற்கு அதற்குத் தேவைப்பட்ட காலப்பகுதியைப் பன்னிரெண்டு மாதங்களுக்கு அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு காலப்பகுதிக்கு மாற்றுவதாகும் மற்றும் மத்திய வங்கியினால் மூலதனப் போதியாந்தன்மை விகிதம் வேறுபடுத்தப்படுகின்றமை காரணமாக அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிப்பதற்கு ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் தேவைப்பட்ட காலப்பகுதியைப் பன்னிரெண்டு மாதங்களுக்கு அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு காலப்பகுதிக்கு மாற்றுவதாகும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழிலிலிருந்து எழுகின்ற குறிப்பிட்ட ஆபத்துக்களைக் கவனத்துட்கொண்டு தோதானவாறு மேலதிக மூலதனத்தைப் பேணும்படி அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியைத் தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(அ) ஒழுங்குபடுத்தும் தேவைப்பாட்டிலுள்ள அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக் காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அவற்றின் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கு அவை திரவச் சொத்துக்களைப் பேணுகின்ற தேவைப்பாட்டுக்கு ஏற்பாடுசெய்வதாகும்; அத்துடன்

(ஆ) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறாக மேலதிகத் திரவச் சொத்துக்களைப் பேணுவதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அவற்றின் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கு அவற்றினால் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய சொத்துக்களைத் தீர்மானிப்பதற்கும் அவ்வாறு செய்யும்படி அவற்றைத் தேவைப்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் இயலுமாந்தன்மையை ஏற்றங்கீகரிப்பதாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் பங்கிலாபங்களின் வெளிப்படுத்துகையின்மீதான பணிப்புக்களை வழங்குவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்வதற்கானதாகும்.

**வாசகம் 16 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்து கின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது கரைகடந்த வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக மத்திய வங்கி வெளிநாட்டு நாணயங்களை பெயர்குறிக்கப்படுவதற்கு இயலச் செய்வதற்கானதாகும்.

**வாசகம் 17 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV ஐ நீக்குகின்றதுடன் 6 ஆம் வாசகத்தி னால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மை யினதாகும்.

**வாசகம் 18 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தனியான மற்றும் ஒன்றுதிரண்ட அடிப்படை ஆகிய இரண்டின்மீதும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியைத் தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 19 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவை நீக்குவதுடன் 18 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 20 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை நீக்குவதுடன் 18 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 21 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இலங்கையினுள் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளை, அவற்றின் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தனியான மற்றும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்பும்படி தேவைப்படுத்துவதாகும் மற்றும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை, இலங்கையினுள் அதன் தொழில் தொடர்பில் அதன் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை, அதன் நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து மூன்று மாதங்களினுள் அனுப்பும்படி தேவைப்படுத்துவதாகும் மற்றும் முறையான வங்கியின் அலுவலக முறையான வலைத்தளத்தில் அத்தகைய நிதிக்கூற்றுக்களை வெளியிடும்படி தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 22 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கணக்காய்வாளர்கள், மேலதிகக் கணக்காய்வுகள், கணக்காய்வறிக்கைகள் மற்றும் மத்திய வங்கிக்குப் பதிலாக அத்தகைய வங்கியினால் அத்தகைய வங்கிகளின்மீது நடாத்தப்பட்ட மேலதிகக் கணக்காய்விற்கான ஆகுசெலவுக் கொடுப்பனவு என்பன தொடர்பான குறித்தசில ஏற்பாடுகளைத் திருத்துவதாகும்.

**வாசகம் 23 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது மத்திய வங்கியானது அதன் துணைநிலைக் கம்பெனிகளுக்கு வரையறுக்காமல் தனியான அல்லது ஒன்றுதிரண்டவோர் அடிப்படையில் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பரிசோதனையை நடாத்துவதற்கு மத்திய வங்கியை இயலச் செய்வதாகும்.

**வாசகம் 24 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின்கீழ் எந்த ஆளின் நியமனம், தேர்தல் அல்லது பெயர்நியமனம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த ஆளொருவரை ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளரொருவராக ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி நியமிக்காதிருப்பதற்கு, தேர்ந்தெடுக்காதிருப்பதற்கு அல்லது பெயர்குறித்துநியமிக்காதிருப்பதற்கு ஏற்பாடுசெய்வதுடன் ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் சபையினது பொறுப்புக்களை விசாலிப்பதுமாகும்.

**வாசகம் 25 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 44அ ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பிரதான நிறைவேற்றலுவலரும் நிறைவேற்றுப் பணிகளைப் புரியும் அலுவலர்களும் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 42(2) இல் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களுக்கிணங்க மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அந்தந்தப் பதவிகளுக்காகத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்களாகவிருப்பதனைத் தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 26 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் பிரிவுகள் 44ஆ மற்றும் 44இ என்பவற்றை உட்புகுத்துகின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றுக்கமைய, ஆட்கள் தத்தமது பதவிகளில் அவர்கள் சேவையாற்றிய காலப்பகுதியின்போது, ஒரு பணிப்பாளராக, பிரதான நிறைவேற்றலுவலராக அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அத்தகைய ஆட்களைத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமாக இருப்பதிலிருந்து தகைமையற்றவர்களாக்கக் கூடியதும் மோசடி, வஞ்சனை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாட்டை அல்லது வேறேதேனும் முறையீனமான நடத்தையை உட்படுத்துகின்றதுமான ஏதேனும் செயலை அத்தகைய ஆட்கள் புரிந்திருப்பின் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டிருப்பின், அத்தகைய ஆட்கள் தத்தமது பதவிகளில் இல்லாதொழிந்திருப்பினுங்கூட, அவர்களைத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்களாகவிராதிருப்போராக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கானதாகும். மேலும் இப்பிரிவின்கீழ் தகுதியற்றவரும் தகுந்தவரற்றவருமென அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஆள், மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வைசெய்யப்பட்ட ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது வேறேதேனும் நிதி நிறுவனத்தின் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்றலுவலராக அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகவுடையவராதலாகாது. ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் பாகம் VI இன் ஏற்பாடு அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல் வேண்டுமென ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 27 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்குப் பணிப்புக்கள் வழங்கும்போது, அத்தகைய வங்கிகளின் சொத்தளவு, அளவு, பல்வேறு பட்டதன்மை மற்றும் தொழிற்பாடுகளின் சிக்கலானதன்மை என்பவற்றைக் கவனத்துட்கொள்வதற்கும், கட்டுப்பாட்டுத் தொடர்புமுறையையும் பொருளாதார இடைச்சார்பையும் உள்ளடக்குவதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படமுடியுமான பாரிய வெளிக்காட்டுகைகளின் எல்லைகளைப் பரந்ததாக்குவதற்கும் மத்திய வங்கியைத் தேவைப்படுத்துவதற்கும் அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில்

குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காக மூன்றாண்டுகளைக்கொண்ட நிலைபெயர் காலப்பகுதியை அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய வேறு காலப்பகுதியை வழங்குவதாகும்.

**வாசகம் 28 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 47 (1) இனை நீக்குகின்றதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழிற் கூறுகளுக்கு மட்டுமே வரையறுப்பதற்கெனவும் அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு விஞ்சுதலாக ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடனுதவித் தொகையைக் கழிப்பதற்கு அத்தகைய வங்கியைத் தேவைப்படுத்துவதற்குமாகும்.

**வாசகம் 29 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பகுதி VIIஅ வினை நீக்குகின்றதுடன் சட்டப்பயனானது ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் வங்கித்தொழிலினது உரித்தாக்குகை தொடர்பான ஏற்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரயோகத்துக்கு ஏற்பாடு செய்வதற்குமானதாகும்.

**வாசகம் 30 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவை நீக்குகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவையும் ஓர் ஒழிப்போனை நியமித்தல் தொடர்பானவையுமான ஏற்பாடுகளை நீக்குவதாகும்.

**வாசகம் 31 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தன்னிச்சையான ஒடுக்குதலுக்கமைந்த ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் காப்பு வைப்புப் பேழையில் வைத்திருக்கப்பட்ட உரிமைகோரப்படாத பணங்களையும் பொருட்களையும் மத்திய வங்கியில் ஒரு விசேட கணக்குக்குக் கைமாற்றுவதற்காக அல்லது அப்பயன்பட தயாரிக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின்கீழ் மத்திய வங்கியினால் பணிக்கப்பட்டவாறாக அத்தகைய பணங்களையும் பொருட்களையும் கையுதிர்க்கப் படுவதற்காக ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

**வாசகம் 32 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவை திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தன்னிச்சையான ஒழித்துக்காட்டுகைக்கு அமைந்த ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் உரிமத்தை இல்லாதாக்குதல் தொடர்பாகக் கடைப்பிடிக்கப் படவேண்டிய நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

**வாசகம் 33 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 முதல் 69 வரையிலான பிரிவுகளை நீக்குவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவுகளின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கட்டாயமான ஒழித்துக்கட்டுகை தொடர்பானவையுமான ஏற்பாடுகளை 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டி ருப்பதனால் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமைக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 34 மற்றும் 35 :** இவ்வாசகங்கள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் மற்றும் 72 ஆம் பிரிவு களைத் திருத்துவதுடன் வாசகம் 33 றினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் மற்றும் 68 ஆம் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 36 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஈ என்னும் பிரிவை நீக்குவதுடன் வாசகம் 17 இனால் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV க்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந் தன்மையினதாகும்.

**வாசகம் 37 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76எ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளினால் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச ஒப்புரவு மூலதனத் தேவைப்பாட்டுக்காக அமைச்சரின் ஒருப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டை அகற்றுவதற்கானதாகும்.

**வாசகம் 38 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளுக்கும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு ஏற்புடையதாகின்றமைக்காக ஏற்பாடுசெய்வதற்கானதாகும்

**வாசகம் 39 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஒ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளுக்குப் பணிப்புக்களை வழங்கும்போது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வர்த்தக வங்கிகளின் சொத்தளவு, அளவு, பல்வேறுபட்டதன்மை மற்றும் தொழிற்பாடுகளின் சிக்கலானதன்மை என்பவற்றைக் கவனத்துட்கொள்வதற்கு மத்திய வங்கியின் இயலுமாந்தன்மையை விசாலிப்பதாகும்.

**வாசகம் 40 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 47, 48அ, 49 மற்றும் 49அ என்பவற்றின் ஏற்புடைமையை உள்ளடக்குவதற்கானதாகும்.

**வாசகம் 41 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளின் கட்டாயமான ஒழித்துக்கட்டுகை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமைக்காக ஏற்பாடுசெய்வதற்காகும்.

**வாசகம் 42 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 17 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV க்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந் தன்மையினதாகும்.

**வாசகம் 43 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 79ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் குறித்தசில ஏற்பாடுகளின் குறித்தசில மீறுகைகளுக்காக நிருவாகக் குற்றப்பணங்களை மத்திய வங்கி விதிப்பதனையும் அவ்வாறு புரியப்பட்ட மீறுகையின் விகிதாசாரப்படி ஓராளின்மீது நிருவாகக் குற்றப்பணங்களை விதிப்பதற்கான நடவடிக்கை முறையையும் அத்தகைய குற்றப்பணத் தொகையையும் மத்திய வங்கி தீர்மானிப்பதனையும் இயலச் செய்வதாகும்.

**வாசகம் 44 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது (99 ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் ஏற்புடையதாகாமையை உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளுக்கும் நீடிப்பதாகும்.

**வாசகம் 45 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 83ஈ மற்றும் 83உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்வதாகும்:-

(அ) மத்திய வங்கியில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளை வகிக்கின்ற குறித்தசில அலுவலர்களுக்கு அல்லது அத்தகைய அலுவலர்களைக் கொண்டுள்ள ஏதேனும் குழுவுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் கையளித்தல்; அத்துடன்

(ஆ) அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்று வதற்கு அவசியமென மத்திய வங்கி கருதக்கூடிய எவையேனும் தகவல்களைக் கொடுத்துதவும்படி மத்திய வங்கி எவரேனுமாளுக்கு அறிவித்தல்.

**வாசகம் 46 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவை திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கணக்காய்வாளர் தலைமையதிபதி, பயனுகர் சொத்தாண்மை, இலங்கைக்குவெளியே கூட்டிணைக்கப்பட்ட ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கிளையொன்றினது பணிப்பாளர் சபை, கட்டுப்பாட்டுத் தொடர்புமுறை, வங்கி மேற்பார்வைப்

பணிப்பாளர், பொருளாதார இடைச்சார்பு, ஈடுபாட்டுப் பங்காளர், வெளிக்காட்டுகைகள், சர்வதேச நியமங்கள், அமைச்சர், நிதிசாராத் துணைநிலைக்கம்பெனி, கரைகடந்த வங்கித்தொழில், பௌதிகச் சமுகம், பங்குதாரர், கவச வங்கி மற்றும் சட்டமுறையற்ற செயற்பாடுகள் என்பவற்றின் வரைவிலக் கணங்களை உள்ளடக்குவதற்கானதாகும்.

***வாசகம் 47*** **:** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II இனை திருத்துகின்றதுடன் அதன் சட்டப்பயனானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான அனுமதிக்கப்படத்தக்க செயற்பாடொன்றாகக் கரைகடந்த வங்கித்தொழிலை உள்ளடக்குவதற்கானதாகும்.

***வாசகம் 48*** **:** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான சேமிப்பு ஏற்பாடொன்றை முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவின்கீழ் பணச்சபையினால் வகுத்தமைக்கப்பட்ட திட்டம், அத்தகைய திட்டத்தின் நியதிநிபந்தனைகளுக்கிணங்க அப்பிரிவின் (3இ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகைபுரிகின்ற வங்கியின் வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் பொறுப்புக்கள் முழுமையாகத் தீர்த்துவைக்கப்படும்வரை, வலுவில் தொடர்ந்திருப்பதற்கு அத்தகைய திட்டம் அதனை ஈடுபடுத்துவதனை அறிமுகப்படுத்துகின்றது.

ச.வ.- ஓ. 42/2023

## 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் “நியமிக்கப்பட்ட தேதி” எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

*1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (6) ஆம் உட்பிரிவில், “மத்திய வங்கியை அல்லது இச்சட்டத்துக்கான 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வங்கிகள் நீங்கலாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான தனியார் கம்பெனியொன்றை” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, “மத்திய வங்கியை அல்லது இச்சட்டத்துக்கான 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வங்கிகள் நீங்கலாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான கவச வங்கியொன்றை அல்லது தனியார் கம்பெனியொன்றை” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஓர் உரிமத்துக்காக விண்ணப்பிப்பதற்கான தகவுடைமைக் கட்டளைக் கற்கள்

2அ. இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்குக் கம்பெனியொன்று தகவுடையதாவென்பதைத் தீர்மானிப்பதில் பின்வரும் கருமங்கள் மத்திய வங்கியினால் கவனத்துட் கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆரம்ப மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி இலங்கையில் தாபிக்கப்படுவதற்காகத் தொடர்ச்சியான நிதிசார் ஆதரவு வழிவகையொன்றாக நிதிசார் வளங்களின் தன்மையும் போதியதாந்தன்மையும்;

(இ) மூலதன மற்றும் வேறு நிதியளிப்பு மூலங்கள், சட்டமுறையற்ற செயற்பாடுகளிலிருந்து பெறப்படுவனவாதலாகாது;

(ஈ) பிரிவு 12 இன் உட்பிரிவு (1ஆ) வின் நியதிகளின்படி முக்கியமான பங்குதாரர்களின் பொருத்தமாந்தன்மை;

(உ) பிரிவு 42 இன் (2) ஆம் உட்பிரிவிற் றரப்பட்டுள்ள கட்டளைக்கற்களின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலர்கள் அல்லது மேலேயுள்ள பதவிகளுள் எவற்றுக்கும் நியமிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட வேறு எவரேனுமாளின் தகுதியும் உரிமையும்;

(ஊ) நல்லாட்சி மற்றும் நேர்மை பற்றிய நியமங்களுக்கு ஒத்த முறையில் தொழிற்படுவதற்கான தடயப் பதிவேடு;

(எ) சொத்தாண்மைக் கட்டமைப்பிலும் பயனுகர் சொத்தாண்மையிலுமான வெளிப்படையானதன்மை;

(ஏ) இலங்கையில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றைத் தாபித்தலானது, வங்கித்தொழில் முறைமையின் ஒப்பேறக் கூடியதன்மையினதும் மற்றும் நிலையுறுதியினதும் நலனுக்கானதாகவும் தேசியப் பொருளாதாரத்தின் நலனுக்கானதாகவும் இருக்கும்; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின் கீழான அல்லது இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான வேறெவையேனும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்.".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய முறையில்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய முறையில், விண்ணப்பக் கட்டணத்துடன்சேர்த்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், பந்தி (ஆ) வின் (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(iii) முற்போந்த மூன்றாண்டுகளுக்காகக் கம்பெனியின் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரதியொன்று;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) மத்திய வங்கியானது, அதன் கிளையொன்றினூடாக வங்கித்தொழிலை நிறைவேற்றுவதற்கு 3 ஆம் பிரிவின் கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளதும், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதுமான ஏதேனும் கம்பெனியை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவை, இலங்கையில் அதன் தொழிலைத் தொடங்குவதற்கு முன்னர், ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையொன்றை அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை இலங்கைக்கு அனுப்புவதற்குப் பொறுப்பேற்கும்படி தேவைப்படுத்தலாம். அவ்வாறு அனுப்பப்பட்ட தொகையானது அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறித்தளிக்கப்பட்ட மூலதனத்தின் பாகமாக அமையலாமென்பதுடன் மத்திய வங்கியுடனான ஒரு வைப்பாக அல்லது மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.";

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது, நிதிசார் நிலைமையின் திடமானதன்மை, ஆபத்து முகாமை, ஆளுகைக் கட்டமைப்பு, மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் திரவத்தன்மை கிடைக்கக்கூடியமை என்பவற்றைக் கருத்திற் கொண்டு அதன் தாய்க் கம்பெனியின் துணை நிலைக் கம்பெனியொன்றாக அல்லது பிரதான கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இலங்கையினுள் தாபிப்பதற்கு (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு இலங்கையில் வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமமொன்று வழங்கப்படுவதனைத் தேவைப் படுத்தலாம்.

(5) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் இலங்கையில் கிளையொன்றாகத் தொழிற்படுமிடத்து, அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, நிதிசார் நிலைமையின் திடமானதன்மை, ஆபத்து முகாமை, ஆளுகைக் கட்டமைப்பு, மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் திரவத்தன்மை கிடைக்கக்கூடியமை என்பவற்றைக் கருத்திற் கொண்டு, இலங்கையில் வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் தாய்க் கம்பெனி யொன்றின் அல்லது அத்தகைய வர்த்தக வங்கியின் பிரதான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் துணைநிலைக் கம்பெனியொன்றைத் தாபிக்கும்படி மத்திய வங்கியானது அத்தகைய வங்கியைப் பணிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(அ) வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய கம்பெனிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா என்பது;".

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "பணச் சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(இ) கடனிறுக்கவகையற்றதாக வந்துள்ளவிடத்தும், இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒடுக்குதல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருக்குமிடத்தும் அதன் வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் நலன்கருதி அத்தகைய வங்கிக்காக ஒழிப்போன் ஒருவர் அல்லது பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்தும்; அல்லது.".

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒடுக்குதலுக்காகக் குறிப்பாக ஏற்பாடுசெய்கின்றதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்பித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, இலங்கை தொடர்பாகவும் இலங்கையிலும் வங்கித் தொழிலை மூடிவிடுமாறும்" என்னும் சொற்களுக்கும் எண்க ளுக்கும் பதிலாக, "இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒடுக்குதலுக் காகக் குறிப்பாக ஏற்பாடுசெய்கின்றதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய வங்கியின் தொழிலை மூடிவிடுமாறும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில்,-

(அ) பந்தி (எ) இல், "கட்டளையை ஆக்கலாம்;" என் னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டளையை ஆக்கலாம்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) பந்தி (ஏ) இல், "கட்டளையை ஆக்கலாம்;" என் னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டளையை ஆக்கலாம்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) "(ஐ) அத்தகைய உரித்தாக்கலுக்குச் சம்மதிக் கின்ற" என்னும் சொற்களிலிருந்து தொடங்கி "ஏற்புடையனவாதல் வேண்டும்:" என்னும் சொற்களுடன் முடிவடைகின்ற எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிடுவதன் மூலமும்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்,-

(அ) "அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட பணச்சபையின் அங்கீகாரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மத்திய வங்கியின் எழுத்திலான அங்கீகாரம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரின் கலந்தாலோசனையுடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, வேறோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியின் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனியின் அல்லது விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனியின் தொழிலை அல்லது தொழிலின் பாகத்தைக் கொள்ளுவதற்கும் அல்லது அதன் தொழில் முழுவதனையும் அல்லது அதன் பாகத்தை விற்பனைசெய்வதற்கும்;";

(ஈ) அதன் (ஈ) என்னும் பந்தியில், "திறப்பதற்கும்." என்னும் சொல்லுக்குப் பதிலாக "காலத்துக்குக்

காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான விண்ணப்பமொன்றுக் கமைய திறப்பதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(உ) அதன் (உ) என்னும் பந்தியில், "உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கியுடன் அல்லது உரிம மளிக்கப்பட்ட விசேட வங்கியுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன், உரிமமளிக்கப்பட்டவொரு விசேடித்த வங்கியுடன் அல்லது உரிமமளிக்கப் பட்ட நிதிக்கம்பெனியொன்றுடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஊ) அதன் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ஊ) மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்து கைக்கு அல்லது மேற்பார்வைக்கு அமைய, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமமளிக் கப்பட்ட விசேடித்த வங்கியொன்று வேறொரு நிதிநிறுவனத்தின் தொழிலை அல்லது தொழிலின் பாகத்தைக் கொள்ளுவதற்கும்.";

(2) அதன் (1ஆ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1ஆ) உட்பிரிவு (1) இன் (இ), (உ) அல்லது (ஊ) என்னும் பந்தியின்கீழான அல்லது உட்பிரிவு (1இ) இன் கீழான அங்கீகாரமொன்று, அத்தகைய கொள்ளுகை அல்லது ஒன்றிணைவு அல்லது ஒன்றுதிரட்டுகை, ஒரு காப்பான, திடமான மற்றும் நிலையுறுதியான வங்கித்தொழில் முறைமையையும்

வங்கித்தொழிலில் நிலவுகின்ற நியாயமான போட்டியையும் ஊக்குவிக்கும் நலனைக்கொண்ட தாகவுள்ளதென மத்திய வங்கி திருப்திப்பட்டா லொழிய, வழங்கப்படுதலாகாது. ஒரு தனியாளுக்கு அல்லது ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு உட்பிரிவு (1இ) இன்கீழான கொள்ளுகையொன் றுக்கான அங்கீகாரத்தை வழங்கும்போது, மத்திய வங்கியானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய தனியாள் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர்கள் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமாவென்பதைத் தீர்மானிப்பதில், பின்வரும் கருமங்களுடன் சேர்த்து மேலதிகமாக 42 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ள கட்டளைக்கற்களைக் கருத்திற்கொள்ளுதல் வேண் டும்:-

(அ) தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தடயப் பதிவேடு;

(ஆ) தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தொழில் திட்டங்களின் திடமான தன்மையும் சாத்தியமும்;

(இ) உரிமமளிக்கப்பட்ட வாத்தக வங்கிக்குத் தொடர்ச்சியான நிதிசார் ஆதரவின் மூலமொன்றாகத் தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதிசார் வளங்களின் தன்மையும் போதுமாந்தன் மையும் அத்தகைய நிதியளிப்பு மூலங்களின் சட்டமுறையானதன்மையும்;

(ஈ) முற்போந்த மூன்றாண்டுகளுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தொழிற் பதிவேடும் அனுபவமும்; அத்துடன்

(உ) சொத்தாண்மைக் கட்டமைப்பில் வெளிப் படையானதன்மையும் பயனுகர் சொத் தாண்மையும்.";

(3) அதன் (1இ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1இ) (அ) தனியாள், பங்காண்மை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு, ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அல்லது ஒரு நியமத்தரினூடாகவோ அல்லது வேறெவரேனும் தனியாளுடன், வேறேதேனும் பங்காண்மையுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுடன் ஒருமித்துச் செயலாற்றியோ, மத்திய வங்கியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கையி னுள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் முக்கியமான அக்கறையொன்றைக் கொள்ளுத லாகாது.

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான அங்கீகாரம், மத்திய வங்கி தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்த கைய நியதிநிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட லாம்.

(இ) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் செயலாளர், (அ) என்னும் பந்திக்கு முரணாக முக்கியமான அக்கறையைக் கொள்ளுதல் செய்துள்ள ஒரு தனியாளின், ஓர் உருவகத்தின் (கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி) அல்லது

அத்தகைய தனியாளின் அல்லது உருவகத்தின் நியமத்தரினது பெயரை அத்தகைய உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கியின் பங்கு இடாப்பில், பங்குதாரர்களின் சுட்டியில் அல்லது பங்குதாரர் களின் பதிவேடுகளை வைத்திருப்பதற்குப் பேணப்பட்ட வேறேதேனும் இடாப்பில் பதித லாகாது என்பதுடன் அத்தகைய ஆள் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒரு பங்குதாரராக அல்லது பங்குதாரராகக் கருதப் படவேண்டிய ஆளொருவராக ஏற்றங்கீகரிக்கப் படுதலுமாகாது.

(ஈ) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, (1இ) என்னும் உட்பிரிவின் மீறுகை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஏலவே யுள்ளவொரு பங்குதாரரினால் புரியப்பட்டுள்ள விடத்து, பணிப்புக்களில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான காலப்பகுதியினுள், விடயத்துக் கேற்ப, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பங்கு இடாப்பிலிருந்து, பங்குதாரர் களின் சுட்டியிலிருந்து அல்லது பங்குதாரர்களின் பதிவேடுகளை வைத்திருப்பதற்குப் பேணப்பட்ட வேறேதேனும் இடாப்பிலிருந்து அத்தகைய பங்குதாரரின் பெயரை அகற்றும்படி அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை அவ்வாறு பணித்தல் மத்திய வங்கிக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும். அத்தகைய அகற்றுகைக்கான பணிப்புத் தேதியிலிருந்து பயனுறுவதாக அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுவது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட பங்குதாரர், (1இ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுக ளுடன் அத்தகைய பங்குதாரர் கம்பெனிகள் இணங்கியொழுகப்படும்வரை, அத்தகைய உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பங்குதாரரொரு வராகக் கொள்ளப்படுதலோ அல்லது கருதப் படுதலோ ஆகாது.

(உ) இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக,-

“ஒருமித்துச் செயலாற்றுதல்” என்பது, ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் அல்லது ஒன்றுதிரட்டும்வகையில் அவ்வுரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் முக்கியமானவோர் அக்கறையைக் கொள்வதில் முனைப்பாக ஒத்துழைப்பதற்கு (விதிமுறைப்பட்டதாயினுஞ்சரி அல்லது விதிமுறைப்படாததாயினுஞ்சரி) ஒரு புரிந்துணர்வினைப் பின்பற்றிச் செயலாற்றுதல் என்று பொருளாகும்;

”முக்கியமான அக்கறை” என்பது, வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டவோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் வழங்கப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்துக்கு மேற்பட்டதை வைத்திருத்தல் அல்லது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின்மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கு உண்டென மத்திய வங்கி தீர்மானித்தால், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளரொருவரை, பிரதான நிறைவேற்று அலுவலரை அல்லது நிறைவேற்றுப் பணியைப் புரிகின்ற அலுவலரொருவரைப் பெயர்குறித்து நியமித்தல், நியமித்தல் அல்லது அகற்றுதல் அல்லது ஓர் ஒப்பந்தத்தைப் பின்பற்றி அல்லது வேறுவகையாக அத்தகைய வங்கியின் கொள்கைகளின் மீது கட்டுப்பாடொன்றைப் பிரயோகித்தல் என்று பொருளாகும்.”;

(4) அதன் (2) ஆம் உட்பிரிவில், "அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச் சபையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மத்திய வங்கியினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(5) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (1இ) இல் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் தனியாள், பங்காண்மை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு, உட்பிரிவு (1இ) இன் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு முரணாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் முக்கியமான அக்கறையைக் கொள்ளுதல் செய்துள்ளாரென அல்லது செய்துள்ளதென மத்திய வங்கி, அத்தகைய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் அடிப்படையின்மீது அல்லது அதன் சொந்தக் கண்டுபிடிப்புக்களின்மீது திருப்திப்படுமிடத்து, மத்திய வங்கி அவசியமெனக் கருதக் கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமையவும் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை, விடயத்துக்கேற்ப, எந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் முக்கியமான அக்கறை அவ்வாறு கொள்ளுதல் செய்யப்பட்டுள்ளதோ அந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு, தனியாளுக்கு பங்காண்மைக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு ஆளுக்குக் கொடுத்தபின்னரும் அத்தகைய முக்கியமான அக்கறையைக் கையுதிர்க்கும்படி அத்தகைய வங்கியை அல்லது அத்தகைய தனியாளை, பங்காண்மையை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவைப் பணிப்பது மத்திய வங்கிக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் கையுதிர்ப்பு பயனுறுத்தப்படும்வரை, எந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் முக்கியமான அக்கறை கொள்ளுதல் செய்யப்பட்டுள்ளதோ அந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை அல்லது இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறியுள்ள தனியாளை, பங்காண்மையை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவை அல்லது விடயத்துக்கேற்ப, அத்தகைய வங்கியையும் தனியாளையும், பங்காண்மையும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவையும் பின் வருவனவற்றுள் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்குப் பயன்கொடுக்கும்படி மத்திய வங்கியானது பணிக்கலாம்:-

(அ) அத்தகைய பங்குவைத்திருக்கைக்கு அல்லது அதன் பாகத்துக்கு உரித்துடைய வாக்களிக்கும் உரிமைகளின் பிரயோகத்தை இடைநிறுத்துதல்;

(ஆ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பங்குவைத்திருக்கை அல்லது அதன் பாகம் தொடர்பில் எவையேனும் பகிர்ந்தளிப்பு உரிமைகளை அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று திரட்டுவதனைத் தடைசெய்தல்;

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி உட்பிரிவு (1இ) இன் ஏற்பாடுகளை மீறியுள்ள ஆளுக்கு மேலதிகப் பங்குகளை வழங்குவதனை அல்லது தனியாளினால், பங்காண்மை யினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செய்யப்பட்ட முனைவைப் பின்தொடர்வதனைத் தடைசெய்தல்;

(ஈ) ஓர் ஒழித்துக்கட்டுதலிற்றவிர, உட்பிரிவு (1இ) இன் ஏற்பாடுகளை மீறியுள்ள அத்தகைய தனியாளுக்கு, பங்காண்மைக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு

ஏதேனும் வகையினதான பகிர்ந்தளிப்பு உட்பட, வருமதியான எவையேனும் பணத்தொகைகளை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி செலுத்துவதனைத் தடை செய்தல்;

(உ) உட்பிரிவு (1இ) ஐ மீறிக் கொள்ளுதல் செய்யப்பட்ட அத்தகைய பங்குவைத்திருக்கையின் மேலதிக விபரங்களை, மத்திய வங்கி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மத்திய வங்கிக்கு வழங்குதல்; அல்லது

(ஊ) மத்திய வங்கியினால் அப்பயன்பட்ட மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் வரை, எவரேனும் பங்குதாரரினால் அவரது பங்குக்கணக்கின் பயன்படுத்தப் படமுடியாத மீதியாக, முக்கியமான அக்கறைக்கு விஞ்சுதலாக வைத்திருக்கப் பட்ட பங்குகளின் வியாபாரத்தின்மீது மட்டுப்பாடொன்றை விதிக்கும்படி உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றை அல்லது மத்திய வைப்பக முறைமையைக் கோருதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "பணச் சபை, அமைச்சரின் ஒருப்பாட்டுடன்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மத்திய வங்கியானது," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "(3) பணச் சபை ஆனது, அறிவித்தல் தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்தபின்னரும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் முன்னர் இடப்பட்ட ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் -"

என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(3) மத்திய வங்கியானது, அறிவித்தல் தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்தபின்னரும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன்முன்னர் இடப்பட்ட ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப்பார்த்தபின்னரும்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(4அ) நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அல்லது அதன் வங்கித்தொழில் தொகுதிக்குச் சேவைகளை வழங்காத நிதிசாராத் துணைநிலைக் கம்பெனியொன்றைக் கொண்டுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியினுள் அத்தகைய துணைநிலைக் கம்பெனியின் ஒப்புரவுப் பங்கு மூலதனத்திலான அதன் சொத்தாண்மையை உரிமைதுறப்பதற்கான மற்றும் அதன் அத்தகைய முடிபையும் அத்தகைய துணைநிலைக்கம்பெனியினால் நிறைவேற்றப்பட்ட தொழிலை அத்தகைய வங்கி எம்முறையில் நிறுத்திவிடுமோ அம்முறையையும் மத்திய வங்கிக்கு அறிவித்தபின்னர் அவ்வாறு செய்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அவர்களின் ஒருப்பாட்டுடனும் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிப்பதற்கு அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, மத்திய வங்கிக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்குப் பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்று அல்லது மத்திய வங்கியினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு காலப்பகுதி அதற்கு அளிக்கப்படுதல் வேண்டும்.";

(3) அதன் (7) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட மூலதன போதுமாந்தன்மை விகிதத்திலான ஏதேனும் வேறுபாடு ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் மத்திய வங்கியினால் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அதன் மூலதனத்தை அதிகரிப்பதற்கு அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்குப் பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்று அல்லது மத்திய வங்கியினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதி அளிக்கப்படுதல் வேண்டும்.";

(4) அதன் (9) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(10) மத்திய வங்கியானது, ஓர் உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழிலிலிருந்து எழுகின்ற குறிப்பிட்ட ஆபத்தைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கி தோதானதெனக் கருதக்கூடிய வாறான மேலதிக மூலதனத்தைப் பேணும்படி அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியைத் தேவைப்படுத்தலாம்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

*"திரவச் சொத்துக்கள்*

21. (1) ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும், எல்லா நேரங்களிலும், மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக அதன் பொறுப்புக்களை எதிர்கொள் வதற்கு தேவைப்படும் திரவச் சொத்துக்களைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளிலான அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு திரவத்தன்மைபற்றிய தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்; அத்துடன் மத்திய வங்கி, செயல்முறைக்குகந்த அளவுவரை, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள்பற்றி ஏற்புடையற்பாலனவான சர்வதேச நியமங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது, காலத்துக்குக் காலம், பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கு ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட மேலதிகத் திரவச்சொத்துக்களைத் தீர்மானிக்கலாம்

என்பதுடன் அத்தகைய சொத்துக்களை மத்திய வங்கியினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விகிதங்களில் பேணுவது ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினதும் கடமையாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

"பங்கிலாபங்களைச் செலுத்துதல்

22. மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் மூலதன அல்லது திரவத்தன்மை மட்டங்களைக் கவனத்துட் கொண்டு, தற்காலிகப் பங்குச்சான்றிதழ் தொகுதியாயினுஞ்சரி அல்லது வேறுவகையானதாயினுஞ்சரி, பங்கிலாபங்களை வெளிப்படுத்துவதற்கு அல்லது செலுத்துவதற்குமுன்னர் அல்லது இலங்கையில் ஈட்டப்பட்ட இலாபங்களை இலங்கைக்கு வெளியே கைமாற்றுமுன்னர், அத்தகைய வங்கியினால் எதிர்கொள்ளப்படவேண்டிய நிபந்தனைகளை விதித்து அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குப் பணிப்புக்களை வழங்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 22அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"கரைகடந்த வங்கித் தொழிலில் பயன்படுத்தப் படவேண்டிய வெளிநாட்டு நாணயத்தை மத்திய வங்கி பெயர் குறித்தல்

22அ. மத்திய வங்கியானது, கட்டளைமூலம், கரைகடந்த வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக வெளிநாட்டு நாணயங்களைப் பெயர் குறிக்கலாம்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV இத்தால் நீக்கப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV இனை நீக்குதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

"*உரிமமளிக்கப் பட்ட வர்த்தக வங்கிகளினால் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் படுதல்*

35. ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும் ஏற்புடையற்பாலனவான கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கணக்குகளையும் பதிவேடு களையும் பேணுதலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும் வேண்டும். ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் நிதிக்கூற்றுக்கள், தனியான மற்றும் ஒன்றுதிரண்டவோர் அடிப்படையில் வங்கி அலுவல்களின் உண்மையானதும் செம்மையானது மான மதிப்பீட்டைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பது டன் அதன் தொழிற்பாடுகளையும் நிதிநிலைமை யையும் பிரதிபலித்தலும் வேண்டும்.".

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவை நீக்குதல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை நீக்குதல்*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை நீக்குதல்*

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்படுதல்

38. (1) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும்,-

(அ) அதன் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் மூன்று மாதங்களினுள், இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் அதன் தொழில் தொடர்பில் அத்தகைய நிதியாண்டுக்காகத் தனியான மற்றும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் அதன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்;

(ஆ) அடுத்துறும் நிதியாண்டுக்கான தனியான மற்றும் ஒன்றுதிரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டிவைக்கப்படும்வரை அதன் தொழிலிடங்களுள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமானவோரிடத்தில் அத்தகைய கூற்றுக்களை வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய கூற்றுக்களைப் பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆகக்குறைந்தது இலங்கையில் புழக்கத்திலுள்ளவொரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாளிலும் முறையான வங்கியின் அலுவலகமுறையான வலைத்தளத்திலும் வெளியிடுதல் வேண்டும்.

(2) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும்-

(அ) அதன் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் மூன்று மாதங்களினுள், இலங்கையில் அதன் தொழில் தொடர்பில் அத்தகைய நிதியாண்டுக்காக அதன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக் களை வங்கி மேற்பார்வைப் பணிப் பாளருக்கு அனுப்புதல் வேண்டும்;

(ஆ) அடுத்துறும் நிதியாண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வெளிக் காட்டி வைக்கப்படும்வரை அதன் தொழிலிடங்களுள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமானவோரிடத்தில் அத்தகைய கூற்றுக்களை வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய கூற்றுக்களைப் பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யினுள் ஆகக்குறைந்தது இலங்கையில் புழக்கத்திலுள்ளவொரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித் தாளிலும் முறையான வங்கியின் அலுவலகமுறையான வலைத்தளத் திலும் வெளியிடுதல் வேண்டும்.

(3) செய்யப்படவேண்டிய எவையேனும் வெளிக்காட்டுகைத் தேவைப்பாடுகளுட்பட, (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படிவத்தை மத்திய வங்கி குறித்துரைக்கலாம் என்பதுடன் அத்தகைய படிவம் குறித்துரைக்கப்படுமிடத்து, ஒவ்வோர் உரிமமளிக்கப் பட்ட வர்த்தக வங்கியினதும் நிதிக்கூற்றுக்கள் அத்த கைய படிவத்தில் தயாரிக்கப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிக்காட்டுகையொன்று அது கொண்டிருப்ப தற்குத் தேவைப்படுகின்ற தகவலைக் கொண்டி ருப்பதில்லையென அல்லது வேறுவகையாகப் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்க்கின்றதாக உள்ளதென மத்திய வங்கி தீர்மானிக்குமிடத்து, மத்திய வங்கியானது, எழுத்திலான அறிவித்தல் மூலம்,-

(அ) முன்னர் விட்டுவிடப்பட்ட தகவலை உள்ளடக்கி ஒரு வெளிக்காட்டுகைக் கூற்றை வெளியிடும்படி;

(ஆ) பொய்யான அல்லது பிழைவழியுய்க் கின்ற தகவலை உள்ளடக்காமல் ஒரு வெளிக்காட்டுகைக் கூற்றை வெளியிடும் படி; அல்லது

(இ) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு திருத்த நடவடிக்கையை எடுக்கும்படி,

அத்தகைய வங்கியைத் தேவைப்படுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவை திருத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) பந்தி (அ) வில், "கணக்குகள், ஐந்தொகை, இலாப, நட்டக் கணக்கு என்பன" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிதிக் கூற்றுக்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) பந்தி (ஆ) வில், "கணக்குகள், ஐந்தொகை, இலாப, நட்டக் கணக்கு என்பன" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிதிக் கூற்றுக்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (1) ஆம் உப்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) இச்சட்டத்தின் கீழ் கணக்காய்வாளர் அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக் கெட்டியவரை -

(அ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் மூலதனத்தை முக்கியமான முறையில் குறைக்கக்கூடிய நட்டங்கள் உறப்பட்டுள்ளனவென அல்லது உறப்படும் சாத்தியம் உண்டென;

(ஆ) அதன் தொழிலைக் கொண்டுநடாத்துகையில் அதன் வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் நலன்களுக்குத் தீங்குவிளைவிக்கும் சாத்தியங்கொண்ட திடமற்ற அல்லது காப்பற்ற செயல்முறையில் அத்தகைய வங்கி ஈடுபடுதலுட்பட, அத்தகைய வங்கியில் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுள்ளனவென; அல்லது

(இ) அத்தகைய வங்கியின் வைப்பாளர்களுக்கும் கடன்கொடுநர்களுக்குமான கடப்பாடுகள் அத்தகைய வங்கியின் சொத்துக்களினால் போதியளவு மேவப்படுவதில்லையென,

கண்டுபிடிப்புக்கள் இருக்குமிடத்து, கணக்காய்வாளர் உடனடியாக அத்தகைய கண்டுபிடிப்புக்களை அல்லது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் காப்பையும் திடமானதன்மையையும் முக்கியமான முறையில் பாதிக்கமுடியுமான வேறேதேனும் கருமத்தை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.";

(3) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(2) நிதியாண்டின் முடிவிலிருந்து இரண்டு மாதங்களினுள் பூர்த்திசெய்யப்படவேண்டியதும் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதுமான ஒவ்வோர் அறிக்கையும், ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுதலும் வெளிக்காட்டுகைகள் செய்யப்படுதலும் தொடர்பான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலுட்பட கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தில் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை நிதிக் கூற்றுக்கள் கொண்டுள்ளனவாவென்பது பற்றியும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் எவரேனும் அலுவலரிடமிருந்து அல்லது முகவரிடமிருந்து ஒரு விளக்கத்தை அல்லது தகவலைக் கணக்காய்வாளர் கோரியுள்ளவிடத்து அத்தகைய விளக்கம் அல்லது தகவல் திருப்தியானதாவென்பதுபற்றியும் கணக்காய்வாளரினாலான கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

(4) அதன் (3அ) என்னும் உட்பிரிவில், "மத்திய வங்கியினால் ஈடுசெய்யப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முறையான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) அதன் (3அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3ஆ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில் மற்றும் அலுவல்களின் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட அம்சங்கள் தொடர்பில் மேலதிகக் கணக்காய்வொன்று நடாத்தப்படுவது தேவையாகவுள்ளதென மத்திய வங்கி கருத்துக்கொள்ளுமிடத்து,

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், அத்தகைய அம்சங்கள்மீது மேலதிகக் கணக்காய்வொன்றை நடாத்தும்படி அத்தகைய வங்கியைத் தேவைப்படுத்தலாமென்பதுடன் அத்தகைய மேலதிகக் கணக்காய்வின் ஆகுசெலவு, முறையான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் எதிர்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(3இ) கணக்காய்வாளர்களின் நியமனம், கடமைகள் மற்றும் தத்துவங்கள் அத்துடன் ஊதியம் என்பன தொடர்பில் பிரிவுகள் 38அ மற்றும் 39 என்பனவற்றின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் மேலதிகக் கணக்காய்வொன்றை நடாத்துவதற்குத் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் கணக்காய்வாளர்கள் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.”;

(6) அதன் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(7அ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கணக்காய்வாளரினது ஈடுபாட்டுப் பங்காளர் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக விருத்தல் வேண்டுமென்பதுடன் கணக்காய்வாளரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான ஏதேனும் தகைமையீனத்துக்கு அவர் அமைந்தவராகவிருத்தலுமாகாது.

(7ஆ) ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும் ஆறாண்டுகளுக்கு ஒரு தடவை அத்தகைய வங்கியின் கணக்காய்வாளரை மாற்றீடுசெய்தல் வேண்டுமென்பதுடன் ஈடுபாட்டுப் பங்காளரை மூன்றாண்டுகளுக்கொருதடவை மாற்றுதலும் வேண்டும்.

(7இ) கணக்காய்வாளரொருவரை ஏலவே நியமித்துள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றினுள் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்."; அத்துடன்

(7) அதன் (8) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "அதன் கிளை நிறுவனங்களுள் எவற்றையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தனியான மற்றும் ஒன்றுதிரண்ட அடிப்படையில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில்,-

(அ) பந்தி (அ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) அத்தகைய ஆள் வங்கித்தொழில், நிதி, பொருளியல், கணக்கீடு, தொழில் நிருவாகம், தகவல் தொழினுட்பவியல், ஆபத்து முகாமை, சட்டம் அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் இயைபான கற்கைத்துறையில் கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளையும் பயனுள்ள அனுபவத்தையும் உடையவராகவிருக்கிறார்;";

(ஆ) பந்தி (இ) வினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) அத்தகைய ஆள், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால், நியாயசபையினால், ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால், மேற்பார்வை அதிகாரசபையினால், உயர்தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவினால், மோசடி, வஞ்சனை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாட்டை உட்படுத்துகின்ற ஒரு குற்றச்சாட்டுப் பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதன்மேல் விளைகின்ற எவையேனும் வழக்குநடவடிக்கைகளுக்கு, விசாரணைக்கு அல்லது புலனாய்வுக்கு அமைந்தவரல்லர்.";

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(4) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில், பின்வருவோரின் பெயர், முகவரி மற்றும் தான் புரிதொழிலையும், அவசியமென அவர் கருதினால் அவர்கள் பற்றிய ஏதேனும் மேலதிகத் தகவலையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிப் பணிப்பாளராக, விடயத்துக்கேற்ப, அத்தகைய நியமனத்துக்கு, தேர்தலுக்கு அல்லது பெயர் நியமனத்துக்குமுன்னர், நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்துநியமிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட ஒவ்வோர் ஆளினதும்;

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் எவரேனும் பணிப்பாளர் தகுதியான வரும் தகுந்தவருமான ஆளொருவரல்லரென அத்தகைய வங்கி அறிந்திருப்பின் அல்லது அத்தகைய பணிப்பாளராகப் பதவிவகிப்பதற்கு அத்தகைய பணிப்பாளர் வேறுவகையில் தகவற்றவராக வருமிடத்து, அத்தகைய நிகழ்வு கள்பற்றி அத்தகைய வங்கி அறியவந்ததிலிருந்து பதினைந்து நாட்களினுள் அத்தகைய பணிப் பாளரினதும்.";

(3) அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(4அ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், (4) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலைப் பெற்றதன்மேல், அவசியமென அவர் கருதினால், உட்பிரிவு (1) அல்லது (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்களுள் எவை தொடர்பாகவும் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கு மேலதிகப் புலனாய்வைச் செய்விக்க லாம்.";

(4) அதன் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(7) விடயத்துக்கேற்ப, எந்த ஆளின் நியமனம், தேர்தல் அல்லது பெயர்நியமனம் (5) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லையோ அந்த ஆளொருவரை ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒரு பணிப்பாளராக அந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி நியமித்தலோ, தேர்ந்தெடுத்தலோ அல்லது பெயர்குறித்துநியமித்தலோ ஆகாது என்பதுடன் அத்தகைய பணிப்பாளரெவரும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஏதேனும் கடமையை அல்லது பணியை ஏதேனும் தன்மையில் நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்படுதலுமாகாது.";

(5) அதன் (12) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(12) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் சபை, அவ்வுரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஆளுகைக் கட்டுக்கோப்புட்பட, அதன் அலுவல்களின் முகாமையை மேற்பார்வை செய்வதற்குக் கடமையுடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வங்கியின் தொழில், ஏற்புடையற்பாலன வான எல்லாச் சட்டங்களுக்கும் இணங்கியொழுகவும் காப்பான மற்றும் திடமான வங்கித்தொழில் செயல்முறைகளை ஒத்திருக்கும்வகையிலும் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இறுதியாகப் பொறுப்பாதலும் வேண்டும்."; அத்துடன்

(6) அதன் (12) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(13) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் சபையுறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வெண்ணிக்கை எவ்விடயத்திலும் ஏழுக்குக் குறைவாகவிருத்தலுமாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் **44**அ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலரும் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறாக நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அத்தகைய வேறு அலுவலர்களும் அத்தகைய முறையான பதவிகளை வகிப்பதற்குத் தகுதியானவர்களும் தகுந்தவர்

களுமான ஆட்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் 42 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஆட்கள் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்களாவென்பதைத் தீர்மானிப்பதில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 44ஆ மற்றும் 44இ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 44ஆ மற்றும் 44இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*“ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் ஒரு பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற ஓர் அலுவலர் என்ற பதவிகளை முன்னர் வகித்த அத்தகைய வங்கியின் ஒரு பணிப்பாளரின், பிரதான நிறைவேற்று அலுவலரின் அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற ஓர் அலுவலரின் தகைமையீனம்*

44ஆ. (1) (அ) மத்திய வங்கியானது, ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அலுவல்கள்மீது நடாத்தப்பட்ட ஏதேனும் பரிசோதனை அல்லது புலனாய்வின் கண்டுபிடிப்புக்களைப் பின்பற்றி, அத்தகைய வங்கியின் ஒரு பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற ஓர் அலுவலராக முன்னர் பதவிவகித்த ஆளொருவர், ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வைசெய்யப்பட்ட வேறேதேனும் நிதிநிறுவனத்தின் ஒரு பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலராக நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அத்தகைய ஆளைத் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவராகவிருப்பதற்குத் தகைமையற்றவராக்கக்கூடிய அத்தகைய பதவியில் அவர் சேவையாற்றிய காலப்பகுதியின்போது, மோசடி, வஞ்சனை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாட்டை அல்லது வேறேதேனும் முறையற்ற நடத்தையை உட்படுத்துகின்ற ஏதேனும் செயலைப் புரிந்துள்ளார் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என எந்நேரத்திலும்

திருப்திப்படுமிடத்து, அத்தகைய ஆள் மத்திய வங்கி தீர்மானம் செய்யும் நேரத்தில் அத்தகைய பதவியை அப்போது வகிக்கவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆள் தகுதியான வரும் தகுந்தவருமான ஆள் ஒருவர் அல்லர் என அவ்வாறு தீர்மானிப்பது மத்திய வங்கிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ஆ) மத்திய வங்கியானது, அத்தகைய தீர்மானத்தைச் செய்யுமுன்னர், அத்தகைய ஆளுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) தகுதியானவரும் தகுந்தவருமான ஆள் அல்லரென (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஆள், ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வைசெய்யப்பட்ட வேறேதேனும் நிதிநிறுவனத்தின் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற வேறு அலுவலராக நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, பெயர்குறித்துநியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகவுடையவராதலாகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் இச்சட்டத்தின் இப்பாகம் மேலோங்கி நிற்றல்

**44இ.** இச்சட்டத்தின் இப்பாகத்தினது ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "உரிமமளிக்கப்பட்ட எல்லா வர்த்தக வங்கிகளுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வங்கிகளின் தொழிற்பாடுகளினது சொத்தளவு, அளவு, பல்வேறுபட்டதன்மை மற்றும் சிக்கலானதன்மை என்பவற்றைக் கவனத்துட்கொண்டு, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒப்புரவு மூலதனம், ஒதுக்குகள் மற்றும் வைப்புக்களையும் செயல்முறைக்குகந்த அளவுக்கு, பெருமளவினவான வெளிக்காட்டுகைகளின்மீது ஏற்புடையற்பாலனவான சர்வதேச நியமங்களைக் கடைப்பிடித்தலுட்பட வேறு இயைபான கரிசனைகளையும் கவனத்துட்கொண்டு, அத்தகைய வங்கியினால்-

(i) ஏதேனும் தனியான கம்பெனிக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, குழுமத்துக்கு, ஆட்கள் கழகத்துக்கு அல்லது ஒரு தனியாளுக்கு; அல்லது

(ii) கூட்டுமொத்தத்தில்-

(அ) தனியாளொருவருக்கு, அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அவர் அல்லது அவரது நெருங்கிய உறவினர்கள் எந்தக் கம்பெனியில் அல்லது குழுமத்தில்

கணிசமான அக்கறைகொண்டுள்ளனரோ அந்த ஒரு கம்பெனிக்கு அல்லது குழுமத்துக்கு; அல்லது

(ஆ) ஆகக்குறைந்தது பின்வரும் கட்டளைக்கற்களுள் ஒன்றேனும் திருப்திப்படுத்தப்படின் சம்பந்தப்பட்ட கடன்பெறுநர்களின் ஒரு தொகுதியினருக்கு:-

(அ) கட்டுப்பாட்டுத் தொடர்புமுறை, ஒரு கம்பெனிக்கும் பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை ஒன்றோடொன்று கட்டுப்பாட்டுத் தொடர்புமுறையைக் கொண்டிருக்கின்றவற்றுக்கும்:-

(i) அதன் துணைநிலைக் கம்பெனிகளுக்கு;

(ii) அதன் கொளிக் கம்பெனிகளுக்கு;

(iii) அதன் இணைக் கம்பெனிக்கு;

(iv) அதன் கொளிக் கம்பெனியின் ஒரு துணைநிலைக் கம்பெனிக்கு;

(v) இவ்வுட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பெனி அல்லது

அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனியின் ஒரு துணைநிலைக் கம்பெனி அதில் கணிசமான அக்கறைகொண்டிருக்கின்ற ஒரு கம்பெனிக்கு;

(vi) அத்தகைய கம்பெனியில் கணிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு தனியாளுக்கு மற்றும் அத்தகைய தனியாளின் நெருங்கிய உறவினர்களுக்கு; அல்லது

(vii) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக அத்தகைய கம்பெனியின் மீது நேரடியான அல்லது நேரடியானதல்லாத கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள வேறேதேனும் கம்பெனிக்கு,

அளிக்கப்படக்கூடிய பெருமளவினவான வெளிக்காட்டுகைகள்மீதான எல்லை;

(ஆ) முன்னர் தீர்மானிக்கப்பட்ட கட்டளைக்கற்களின் அடிப்படையின்மீது மத்திய வங்கி

யினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாகச் சம்பந்தப்பட்ட கடன்பெறுநர்களிடையேயான பொருளாதார இடைச்சார்பு:

ஆயின், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றினுள் அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்;

(2) அதன் உட்பிரிவு (11அ) வை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(11ஆ) உட்பிரிவுகள் (3), (4), (5), (6), (7), (11) மற்றும் (11அ) என்பவற்றின் ஏற்பாடுகள் பின்வரும் ஆட்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆட்கள் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்:-

(அ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடையற்பாலதானவொரு திட்டத்தின்கீழ் ஒரு பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அல்லது அத்தகைய வங்கியின் நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட கடனுதவியொன்று தவிர அளிக்கப்பட்ட ஏதேனும் கடனுதவி தொடர்பில் அத்தகைய அலுவலர்;

(ஆ) தனிப்பட்டதாயினுஞ்சரி, முக்கியமான அக்கறையைக் கொண்டுள்ள ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பங்குதாரர் ஒருவர் அல்லது தாபனமொன்று;

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் துணைநிலைக் கம்பெனியொன்றும் இணைக் கம்பெனியொன்றும்;

(ஈ) தாய் வங்கியும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றின் துணைநிலைக்கம்பெனியும் நீங்கலாக, அதன் துணைநிலைக் கம்பெனிகளுட்பட, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கொளிக் கம்பெனியொன்று;

(உ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் துணைநிலைக் கம்பெனியொன்றின் அல்லது இணைக் கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவர் மற்றும் ஒரு கொளிக்கம்பெனியினதும் அதன் துணைநிலைக்கம்பெனிகளினதும் பணிப்பாளரொருவர்;

(ஊ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரின் மிக நெருங்கிய உறவினர்;

(எ) எந்தத் தாபனத்தின் பணிப்பாளர் அல்லது பங்காளர் அத்தகைய வங்கியின் பணிப்பாளரொருவராகவுள்ளாரோ அந்தத் தாபனமொன்று; அத்துடன்

(ஏ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் முக்கியமான பங்காளரொருவர் அல்லது அவரது மிகநெருங்கிய உறவினர்களுள் எவரும் கணிசமான அக்கறையை அதிற் கொண் டுள்ள தாபனமொன்று.

(11இ) உட்பிரிவுகள் (3), (4), (5), (6), (7), (11) அல்லது (11அ) என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.";

(3) உட்பிரிவு (13)ஐ உடனடுத்துப் பின்வருவதனை உட் புகுத்துவதன்மூலமும்:-

"(14) (அ) மத்திய வங்கியானது, ஓர் உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை, 19 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஒழுங்குபடுத்தும் விகிதங்களைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக எவரேனும் தொடர்புபட்ட திறத்தவருக்கு (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்கு விஞ்சுதலாக அத்தகைய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடனுதவியின் தொகையைக் கழிக்கும்படி தேவைப்படுத்தலாம் அல்லது மத்திய வங்கியினால் பணிக்கப்பட்டவாறு அத்தகைய பிணைப்பொறுப் பினால் அத்தகைய விஞ்சுதொகைக்குப் பிணைப் பொறுப்பளிக்கும்படி தேவைப்படுத்தலாம்.

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுவதற்கு ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு மத்திய வங்கி அளிக்கக்கூடிய குறைந்தபட்சக் காலப்பகுதி பன்னிரெண்டு மாதக் காலப்பகுதியாக விருத்தல் வேண்டும் அல்லது எவ்விடயத்திலும் மூன்றாண்டுக் காலப்பகுதியை விஞ்சாததாகவிருக்க வேண்டியதும் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியதுமான அத்தகைய வேறு காலப்பகுதியாக விருத்தல் வேண்டும்.".

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VIIஅ இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VIIஅ வை நீக்கிவிடுதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவை நீக்கிவிடுதல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) "54 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அதன் சகல கடப்பாடுகளையும் விடுவித்துள்ளதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய வங்கியின் பெயர், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் நிரலி லிருந்து அகற்றப்படுதல் வேண்டுமென்பதுடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "54 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அதன் சகல கடப்பாடு களையும் விடுவித்துள்ளதென அபிப்பிராயப்படு கின்றவிடத்து," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (இ) என்னும் பந்தியில், "72 ஆம் பிரிவிற்கிணங்கக் கையாளப்படும்வரை", என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "72 ஆம் பிரிவிற்கிணங்கக் கையாளப்படும்வரை; அத்துடன்" என்னும் சொற்களை யும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரு வதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ஈ) 54 ஆம் பிரிவின்கீழ் சட்டபூர்வமான சொந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்டிராதவையும் அல்லது திருப்பிக்கொடுக்கப்பட்டிராதவையும் காப்பான வைப்புப் பேழையில் வைத்திருக்கப்பட்ட

வையுமான எல்லாப் பணங்கள் அல்லது வேறு பொருட்கள், விடயத்துக்கேற்ப, மத்திய வங்கியின் விசேட கணக்கொன்றுக்குக் கைமாற்றப்படும்வரை அல்லது விடயத்துக்கேற்ப, அத்தகைய நோக்கத் துக்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப் புக்களுக்கிணங்கக் கையுதிர்க்கப்படும்வரை.";

(4) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"நிலுவையாகவுள்ள சொத்துக்களை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் சொந்தக்காரர்களுக் கிடையே பகிர்ந்தளித்தல்.".

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"ஓர் உரிமமளிக்கப் பட்ட வர்த்தக வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கு தலும் நிரலிலிருந்து பெயரை அகற்றுதலும்

56. ஐம்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க நிலுவையாகவுள்ள எல்லாச் சொத்துக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளவுடன், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், தன்னிச்சையான ஒடுக்குதலுக் கமைந்த அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை, மத்திய வங்கிக்கு அதன் அங்கீகாரத் துக்காக அத்தகைய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்படி பணித்தல் வேண்டும். கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மத்திய வங்கியினால் அங்கீகரிக் கப்பட்டவுடன் மத்திய வங்கியானது, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு வழங்கப்பட்ட

உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வங்கியின் பெயர், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் நிரலிலிருந்து அகற்றப் படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 முதல் 69 வரையிலான பிரிவுகளை நீக்கிவிடுதல்*

***33.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 முதல் 69 வரையிலான பிரிவுகள் (இரண்டுமுட்பட) இத்தால் நீக்கப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***34.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவில், "எடுத்தல் வேண்டும். 63, 68 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ் அலுவல்களை ஒடுக்குதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "எடுத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***35.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கடல் கடந்த பிரிவினுள் வைத்திருக்கப்படும் அத்தகைய பொருள்கள்தவிர்ந்த, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுள் வைத்திருக்கப்படும் 63 ஆம், 68 ஆம் பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பொருட்களுடன் மேலதிகமாக இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட பொருள்களும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கரைகடந்த ஒரு கூறினால் அவ்வாறு வைத்திருக்கப்பட்ட அத்தகைய பொருள்கள்தவிர, ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வைத்திருக்கப்பட்டவையும், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் எடுத்துக்கூறப்பட்டவையுமான பொருள்கள்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்*

***36.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஈ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச்சபையானது," என்னும் சொற்களுக்குப் பதிலாக "மத்திய வங்கியானது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவு, "பாகம் V மற்றும் பாகம் VI என்பனவற்றின் ஏற்பாட்டுடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 21, பாகம் V மற்றும் பாகம் VI என்பனவற்றின் ஏற்பாடுகளுடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) ''உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் அல்லது ஏதேனும் வகுதியினவான உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் ஏதேனும் தொழில் அம்சம் நடாத்தப்படவேண்டிய முறை சம்பந்தமாக, குறிப்பாகப் பின்வருவன சம்பந்தமாக அத்தகைய வங்கிகளுக்குப் பணிப்புக்களை விடுக்கலாம்-" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"அத்தகைய வங்கிகளின் தொழிற்பாடுகளினது சொத்தளவு, அளவு, பல்வேறுபட்டதன்மை மற்றும் சிக்கலானதன்மை என்பவற்றைக் கவனத்துட் கொண்டு அல்லது அத்தகைய வங்கிகளின் தொழிலினது ஏதேனும் அம்சம் நடாத்தப்படவேண்டிய முறை தொடர்பாக, அவற்றுள் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு எழுத்தில் குறிப்பிடப்படவேண்டிய காரணங்களுக்காக மற்றும் குறிப்பாகப் பின்வருவன சம்பந்தமாக அத்தகைய வங்கிகளுக்குப் பணிப்புக்களை விடுக்கலாம்-"; அத்துடன்

(2) அதன் (ஓ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவைத் திருத்துதல்

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஓ என்னும் பிரிவு, "76ஓ. நாற்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "76ஓ. பிரிவுகள் 45, 47, 48அ, 49 மற்றும் 49அ என்பவற்றின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவைத் திருத்துதல்

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,-

(அ) அதன் (i) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(i) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வங்கியானது இலங்கைக்குள் கூட்டிணைக்கப்படுமிடத்து அல்லது தாபிக்கப்படுமிடத்து, இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளையும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளையும் ஒடுக்குவதற்காகக் குறிப்பாக ஏற்பாடுசெய்கின்றவையும், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழானவையும் வங்கியை ஒடுக்குவதற்கானவையுமான வழக்குநடவடிக்கைகள் தொடங்கப்படுதல் வேண்டும்;";

(ஆ) அதன் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ii) வங்கியானது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்படுமிடத்து, பிரிவு 76அ வின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வங்கி

யின் தொழில் முடிவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளையும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளையும் ஒடுக்குவதற்காகக் குறிப்பாக ஏற்பாடுசெய்கின்ற, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதன் அலுவல்கள் ஒடுக்கப்படுதலும் வேண்டும்.";

(2) அதன் (3அ), (3ஆ), (3இ), (3ஈ), (3உ), (3ஊ) மற்றும் (3எ) என்னும் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "33 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 41 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "41 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 79ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 79ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"மத்திய வங்கி நிருவாகக் குற்றப்பணத்தை விதித்தல்

79ஆ. (1) இச்சட்டத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் பங்கமின்றி, இச்சட்டத்தின் உட்பிரிவுகள் (1இ), 12 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகள், 19 ஆம் பிரிவு, 21 ஆம் பிரிவு, 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு அல்லது 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தி என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாளுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்தபின்னர் அவரின்மீது நிருவாகக் குற்றப்பணமொன்றை விதிப்பது மத்திய வங்கிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) மத்திய வங்கி, நிருவாகக் குற்றப்பண மொன்றை விதிப்பதற்குத் தீர்மானிப்பதில், பின்வரு வனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய மீறுகையின் பாரதூரமான தன்மை;

(ஆ) அத்தகைய மீறுகையின் மீள்நிகழ்வு உள்ள தாவென்பது;

(இ) அத்தகைய மீறுகையின் விளைவாக வைப்பீட்டாளர்களுக்கு அல்லது வேறெ வரேனுமாளுக்கு ஏதேனும் நட்டம் அல்லது சேதம் விளைவிக்கப்படுகின்றதாவென்பது;

(ஈ) எந்த ஆளுக்கெதிராகத் தண்டமொன்று விதிக்கப்படவுள்ளதோ அந்த ஆள் அத்தகைய மீறுகையிலிருந்து தகாத முறையில் நன்மைபெறுகின்றாராவென் பது;

(உ) அத்தகைய ஆளின் நிதிசார் மூலவளங்கள்;

(ஊ) எவையேனும் தணிக்கின்ற காரணிகள்; அத்துடன்

(எ) இயைபானவையாக உள்ளனவென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(3) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆளொருவர்மீது நிருவாகக் குற்றப்பண மொன்றை விதிப்பதற்கான நடவடிக்கைமுறை யையும் முறையையும் அவ்வாறு புரியப்பட்ட மீறு கைக்கு விகிதாசாரப்படி அத்தகைய குற்றப்பணத் தின் தொகையையும் தீர்மானித்தல் வேண்டும்.”.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவைத் திருத்துதல்**

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவு, “அத்தகைய வங்கி” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியும் அத்தகைய வங்கியும்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 83ஈ மற்றும் 83உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்**

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 83ஈ மற்றும் 83உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

**“மத்திய வங்கி அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கையளித்தல்**

83ஈ. மத்திய வங்கி, அது அவசியமெனக் கருதினால், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் கொண்டு நடாத்துவதற்கு, விடயத்துக்கேற்ப, ஆளுநருக்கு, பிரதி ஆளுநருக்கு, உதவி ஆளுநருக்கு, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு, துறைத்தலைவரொருவர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள மத்திய வங்கியின் வேறெவரேனும் அலுவலருக்கு, அல்லது மத்திய வங்கியின் அத்தகைய அலுவலர்களைக் கொண்டுள்ள ஏதேனும் குழுவுக்குக் கையளிக்கலாம்.

**ஏதேனும் தகவல் முதலியவற்றைக் கொடுத்துதவும்படி மத்திய வங்கி எவரேனுமாளுக்கு அறிவித்தல்**

83உ. (1) மத்திய வங்கி, எழுத்திலான அறிவித்தல் மூலம், ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை, ஓர் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியை, அத்தகைய வங்கியின் நிறைவேற்றுப் பணியைப் புரிகின்ற ஒரு பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது அலுவலர் தவிர்ந்த எவரேனுமாளுக்கு, அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறானதும் இச்சட்டத்தின் கீழான தத்துவங்களையும், கடமைகளையும்,

பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமென மத்திய வங்கி கருதக்கூடியவாறானதுமான ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி அறிவிக்கலாம்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றைப் பெறுகின்ற எவரேனுமாள் அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அதன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''கடனுதவி'' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"கணக்காய்வாளர் தலைமையதிபதி" என்பது, அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;";

(2) "வங்கித்தொழில்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"பயனுறு சொந்தக்காரர்" என்பது, ஒரு கம்பெனியிலான நேரடியான அல்லது நேரடியல்லாத சொத்தாண்மை அல்லது பங்குகளை அல்லது வாக்களிக்கும் உரிமைகளைக் கட்டுப்படுத்துதல் அல்லது

அதிலான சொத்தாண்மை அக்கறையினூடாக, முழுமையாக அல்லது பகுதியளவில், ஒரு கம்பெனியின் பத்துச் சதவீதத்தை இறுதியாகச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஓர் இயற்கை ஆள் என்று பொருளாகும் என்பதுடன் வேறு வழிவகைகளினூடாக பயனுள்ள கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற இயற்கை ஆட்களையும் உள்ளடக்கும்; அத்துடன் பயனுகர் சொத்தாண்மை அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்;

"இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக் கிளையின் பணிப்பாளர் சபை" என்பது, முறையான கிளையை மேற்பார்வை செய்கின்ற அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தலைமையலுவலகம் அல்லது பிராந்திய அலுவலகம் அல்லது அத்தகைய கிளையின் பணிப்பாளர் சபையாகச் செயலாற்றுவதற்கு, விடயத்துக்கேற்ப, அத்தகைய தலைமையலுவலகத்தினால் அல்லது பிராந்திய அலுவலகத்தினால் முகாமையை மேற்பார்வைசெய்வதற்கான தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள ஒரு முகாமைக் குழு என்று பொருளாகும்;";

(3) "தாபனம்" என்ற வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"கட்டுப்பாட்டுத் தொடர்புமுறை" என்பது, ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கடன்பெறுநர் ஒருவர் அத்தகைய வங்கி

யின் ஏனைய கடன்பெறுநர்களின் செயற்பாடுகளின்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அவருக்குள்ள இயலுமாந்தன்மை என்று பொருளாகும்;";

(4) ''வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்" என்பது, இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினதும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளினதும் ஒழுங்குபடுத்துகையும் மேற்பார்வையும் பொறுப்பிக்கப்பட்ட மத்திய வங்கியின் பகுதித் தலைவராகவுள்ள மத்திய வங்கியின் ஊழியரொருவர் என்று பொருளாகும்;";

(5) "உள்நாட்டு வங்கித்தொழில்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"பொருளாதார இடைச்சார்பு" என்பது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் வேறெவரேனும் கடன்பெறுநரின் நிதிக்கஷ்டங்கள் முதற்குறிப்பிடப்பட்ட கடன்பெறுநரின் திருப்பிக்கொடுப்பதற்கான ஆற்றலைத் தடைசெய்யக்கூடிய சாத்தியமுடையதாகவிருக்குமிடத்து, வேறெவரேனும் கடன்பெறுநரின் தொழிலின்மீது அத்தகைய வங்கியின் ஒரு கடன்பெறுநர் தங்கியிருத்தல் என்று பொருளாகும்;

"ஈடுபாட்டுப் பங்காளர்" என்பது, கணக்காய்வு ஈடுபாட்டுக்காகவும் அதன் செயல்நிறைவேற்றத்துக்காகவும், குழுமத்தின் சார்பில் வழங்கப்படுகின்ற கணக்காய்வாளரின் அறிக்கைக்காகவும் பொறுப்பாகவுள்ளவரும், தேவைப்படுமிடத்து, ஓர் உயர்தொழில்சார், சட்ட அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவிடமிருந்து தோதான அதிகாரத்தை உடையவருமான குழுமத்திலுள்ள பங்காளர் அல்லது வேறு ஆள் என்று பொருளாகும்;

"வெளிக்காட்டுகைகள்" என்பது, கடனுதவி மற்றும் எல்லா நிதிசார் முதலீடுகளும் என்று பொருளாகும்;";

(6) "வர்த்தக வங்கித் தலைமை அலுவலகம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"சர்வதேச நியமங்கள்" என்பது, வங்கித் தொழில் மேற்பார்வைமீதான பசெல் குழு, நிதிசார் நிலையுறுதிச் சபை, மற்றும் அத்தகைய வேறு ஒத்த நியமமிடும் நிறுவனம் உட்பட, பூலோகரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்டவையும், பல நியாயாதிக்கங்களிலிருந்தான நிபுணர்களின் ஒத்திசைவினூடாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளவையும், கோட்பாடுகள், வழிகாட்டுநெறிகள், செய்முறைகள் அல்லது பண்பியல்புகளைக் கொண்டுள்ளவையுமான நியமங்கள் என்று பொருளாகும்;";

(7) "உள்ளூர் அதிகாரசபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் **44** ஆம் அல்லது **45** ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;";

(8) "பணச்சபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன்மூலமும்:-

"நிதிசாராத் துணைநிலைக் கம்பெனி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஒரு ''நிதிசார் துறைப் பங்குபற்றுநரின்'' தொழில்தவிர்ந்த தொழிலை நிறை வேற்றுகின்ற ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது ஓர் உரிம மளிக்கப்பட்ட விசேடித்த வங்கியின் துணைநிலைக்கம்பெனி என்று பொரு ளாகும்;";

(9) ''வதிவற்ற" என்ற சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன்மூலமும்:-

"கரைகடந்த வங்கித்தொழில்" என்பது, வதிவற்றோருக்கும், காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான குறித்தசில வதி வோருக்கும் ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட

வெளிநாட்டு நாணயத்தில் ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வங்கித்தொழில் வழங்கப்படுதல் என்று பொருளாகும்;

”பௌதிகச் சமுகம்” என்பது, ஒரு நாட்டினுள் அமைந்துள்ள அர்த்தமுள்ள மனம் மற்றும் முகாமைத்துவம் என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய நாட்டின் ஓர் உள்நாட்டு அல்லது குறைந்தமட்டப் பணியாட்டொகுதியினரின் எளிமையான அல்லது வெறுமனேயான உளதாந்தன்மையை உள்ளடக்காது;”;

(10) “வதிகின்ற” என்பதன் வரைவிலக்கத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

“பங்குதாரர்” என்பது, (திருத்தப்பட்டவாறான) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“கவச வங்கி” என்பது, வங்கியொன்று எந்த நாட்டில் கூட்டிணைக்கப்படுகின்றதோ மற்றும் உரிமமளிக்கப்படுகின்றதோ அந்த நாட்டில் பௌதிக சமுகமெதனையும் கொண்டிருக்காததும், பயனுறு ஒன்றுதிரட்டிய மேற்பார்வைக்கு அமைந்ததாகவுள்ளவொரு நிதிசார் தொகுதியுடன் இணைந்ததாகவிராததுமான ஒரு வங்கி என்று பொருளாகும்;”;

(11) "கணிசமான அக்கறை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "பொருளாகும்." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பொருளாகும்;"; என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(12) "கணிசமான அக்கறை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"சட்டமுறையற்ற செயற்பாடு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய் தாக்கல் தடைச் சட்டத்தில் கொடுக்கப் பட்டவாறான அதே பொருளைக் கொண் டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II ஐத் திருத்துதல்

**47.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (வ) என்னும் விடயத்தில் "வேண்டும்." என்னும் சொல்லுக்குப் பதிலாக "வேண்டும்;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) (வ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரு வதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(அஅ) கரைகடந்த வங்கித்தொழிலை நடாத்துதல்.".

பிரிவு 76க இன்கீழ் பணச்சபையினால் வகுத்தமைக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான விசேட ஏற்பாடு

**48.** இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76க என்னும் பிரிவின் (3இ) என்னும் உட்பிரிவு நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அப்பிரிவின் (3இ) என்னும் உட்பிரிவின்கீழ் பணச்சபையினால் வகுத்தமைக்கப்பட்ட ஏதேனும் திட்டம், அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகை புரியும் வங்கியின் வைப்பாளர்களினதும் கடன்கொடுநரினதும் பொறுப்புக்கள்

அத்தகைய திட்டத்தின் நியதிநிபந்தனைகளுக்கிணங்க முழுமையாகத் தீர்த்துவைக்கப்படும் வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**49.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.